1984 மார்ச் 9]

36 ஆயிரம் டன் மதிப்புள்ள அளவிற்கு உற்பத்தி செய்ய ' டான்சம் ' என்று சொல்லப்படுகிற தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தினுடைய பிரிவின் கீழ் திருச்சி மாவட்டத்தில் அதை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேற்கொண்டும் அத்தகைய பைப்-லைன்ஸ் தேவையா என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையில் அரசு இதுகுறித்து ஆராயும்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் சிமெண்ட் குழாய்கள் மற்றும் கிராதிகள் தயாரிக்க பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது ? அந்தத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மதிப்பிடப்பட்டிருக்கிற முதலீடு ஏழு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய். 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வாக்கில் பணி துவங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கூடலூர் தாலுகாவிலுள்ள தங்கச் சுரங்கங்கள்.

241—* வினா. எண். 20559—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தாலுக்காவில் தங்கச் சுரங்கங்கள் மூடப்பட்டு விட்டது உண்மையா?

(ஆ) ஆம், எனில் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இங்கு சுரங்கப் பணிகள் மீண்டும் துவக்கப்பட்டால் இலாபகரமாயிராது என்பதால் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டத்திற்கான வாய்ப்பு இல்லை.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கச் சுரங்கம் மூடப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறார்கள். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது அதைத் துவக்குவதற்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது, அது நமக்கு வெற்றிகரமாக வராததற்கு என்னென்ன காரணங்கள் சாதகமாக இல்லை என்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தங்கம் இருக்கின்ற இடம் நீலகிரி மாவட்டத்தின் கூடலூர் தாலுக்காதான். ஆரம்பத்தில் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னாலே கணக்கிடப்பட்ட அந்த அடிப்படையில் லண்டனைச் சேர்ந்த கிட்டத்தட்ட 33 நிறுவனங்கள் அந்த ஆய்வுகளை மேற்கொண்டு அந்தப் பணிகளைத் தொடங்கின. பிறகு 1958-ல் இருந்து 1968 வரையில் மாநில அரசும், மத்திய அரசும் அவற்றின் அமைப்புகள் மூலம் புதிய நவீன முறையின் அடிப்படையில் அங்கே எந்த அளவிற்குத் தங்கம் கிடைக்கும் என்று ஆய்வுகள் நடத்தின. அங்கே அல்போ சுரங்கம், ஹேர்வுட் சுரங்கம், போனிக் சுரங்கம் ஆகிய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கே கிடைக்கும் தங்கத்தின் அளவு ஒரு டன்னுக்கு 3 கிராமிற்கும் குறைவாக இருக்கும் என்பதால் 'economically such mining will not be viable.' என்ற முடிவிற்கு வந்து அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். தருமபுரி மாவட்டத்தில் வேப்பணப்பள்ளி பகுதியில் தங்கம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்த ஆய்வுகள் முடிந்து, தருமபுரி மாவட்டத்தில் வேப்பணப்பள்ளி பகுதியில் நாளப்பள்ளி மற்றும் மகாராசக்கடை போன்ற இடங்களில் தங்கச் சுரங்கம் இருக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, அந்தத் தங்கச் சுரங்கம் மூடப்பட்ட காலத்தில் தங்கத்தின் விலை குறைவாக இருந்து இருக்கும். இன்றைக்கு அதன் விலை அதிகமாக இருப்பதால், அதை மீண்டும் தொடர்வதற்கு அரசுக்கு சிந்தனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, The cost of production as on date would have gone up in view of the erosion in the value of money. This is for the kind information of the hon. Member.

ஈரோடு நகரில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட கையகப் படுத்தப்பட்ட நிலம்.

192 *வினா எண். 19656—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு பெரியார் நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளுக்காக எடுக்கப்பட்ட நிலத்துக்கு விலை அதிகம் கேட்டு நிலச் சொந்தக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் என்ன?